www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

15 FEBRUARY 2023 - WEDNESDAY | Pages - 09 | E Paper - # 028 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk




## தலைகீழாகத் தொங்கும் விஞ்ஞானத்தின் செருக்கு

# 13ஐ அமுல்படுத்தாதே: அடம்பிடிக்கும் தென்னிலங்கை

## ரணிலின் வழமையான காய்நகர்த்தலே!

### தமிழ் தரப்பு குற்றச்சாட்டு

(சுஐப்,எம்,காசிம்)

ஜனாதிபதியின் அண்மைக்கால செயற்பாடுகளால்,அவர் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் மட்டுமே, ஜனாதிபதிப் பதவியைப் பெறுப்பேற்றதாகக் கூறிய அவர்,தற்போது 2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துச் செயற்படுவதாக தென்னிலங்கை கடும்போக்குகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.இதை,மனதிற்கொண்டே தமிழர்களின் ஆதரவைப் பெறும் நோக்கில், அரசியலமைப்பின் 13ஐ அமுல்படுத்தப்போவதாக அவர் கூறியதாக கடும்போக்குகள் கருதுகின்றன.

இதனால்,கடும் எதிர்ப்புக்கள்

02 »»»

## மின் கட்டண அதிகரிப்பு: நீதி மன்றம் செல்வேன்

ஜனக ரத்நாயக்க

இன்று (15) முதல் 66% மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பெரும்பான்மையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், ஏனைய மூன்று உறுப்பினர்களின் இணக்கப்பாடு

02 »»»

## ஆர்ப்பாட்டங்களுக்கு அடிபணியோம்

ஜனாதிபதி அதிரடி



குறிப்பிட்ட சில அதிகாரிகளை நீக்கக் கோரி வேலைநிறுத்தம் நடப்பதற்காக நாம் யாரையும் தன்னிச்சையாக நீக்க மாட்டோம். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கென சில விதிமுறைகள் இருப்பதனால் அரசாங்கம் அவற்றை முறைப்படி பின்பற்றியே செயற்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்தார்.

கொழும்பு ட்ரேஸ் சிட்டியிலுள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் (SLTC) ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தில் நேற்று (15) காலை, நிர்வாகம் மற்றும் பொதுக் கொள்கைக்கான மையத்தை (C-GaPP) உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து

02 »»»

## வானுயரும் மின்கட்டணம்

ஆணைக்குழுவின் தலைவர் என்ற ரீதியில் எனது அனுமதி இல்லாமல் அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியில்

02 »»»

## வாக்களிக்கும் உரிமையை அதிகாரிகள் மீறக்கூடாது



அநுர குமார திஸாநாயக்க

ஓய்வு பெறும் காலத்தை நீடிப்பதற்காகவோ அல்லது வெளிநாட்டுத் தூதுவர் பதவியைப் பெறுவதற்காகவோ அரச அதிகாரிகள் வாக்களிக்கும் உரிமையை மீறக் கூடாது, அவ்வாறு செய்தால் அரசியலமைப்பின் படி அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

02 »»»

## சம்மாந்துறை தவிசாளராக மாஹிர் தெரிவு!



சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் இராஜினாமா செய்தமையினால் பிரதேச

02 »»»

## தேர்தலை சீர்குலைப்போர் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவர்



சஜித் பிரேமதாஸ

தேர்தலுக்கு இடையூறு

02 »»»

## ஹஜ், வக்பு சபைகளுக்கு விரைவில் புது உறுப்பினர்கள்

02 »

## அரசு துறை பட்டதாரிகளுக்கு ஆசிரியராகும் வாய்ப்பு

02 »

## கஹட்டோவிட்ட நிகழ்வில் டாக்டர் சாபி உருக்கம்

### முழு முஸ்லிம் சமூகத்துக்கு நன்றியும் தெரிவிப்பு



இது நான் அடைந்த வெற்றி மாத்திரமல்ல ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் அடைந்த வெற்றி என வைத்தியர் சாபி சிஹாப்தீன் தெரிவித்தார்.

MEPS நிகழ்வில், வைத்தியர் சாபி சிஹாப்தீன் முதல் தடவையாக சமூகத்தை விழித்து ஆற்றிய உருக்கமான உரை,

குருநாகலையில் ஒரு கிராமத்திலிருந்து இந்த சமூகத்தில் அறிமுகமாகியவன் நான் எங்களுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டம் வரும் அதாவது,அல்லாஹ்வின் உதவியை தவிர வேறு ஒரு உதவியும்

02 »»»

## இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்புக்கு தீங்கிழைக்கும் செயல்களை அனுமதியோம்

### வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கொச்சியில் பேட்டி

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்புக்கு தீங்கு ஏற்படுத்தும் எந்தச் செயலையும் அனுமதிக்கமாட்டோம் என்று கொச்சியில் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

02 »»»

## இந்தியாவின்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒரு தனியார் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிறகு சனிக்கிழமை அன்று கேரளாவின் கொச்சி நகரில் பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:

இந்தியா கவலைப்பட வேண்டியது இல்லை. இந்தியா - இலங்கை உறவு வலுவாக உள்ளது. இந்த உறவு நாகரீகத்தின்

ஓர் அங்கமாகும். நமது பிராந்தியத்தில் இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தச் செயலையும் அனுமதிக்கமாட்டோம். சீனாவும் எங்களது நட்பு நாடுதான். ஆனால், இது இந்தியாவின் நலனுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாது. இதனை இந்திய அரசிடம் தெளிவுப்படுத்தியுள்ளோம்.

இந்தியாவும் - இலங்கையும் ஒரே குடும்பத்தைப் போன்றது. பிரச்சினைகள் ஏற்படும்போது ஒரு குடும்பத்தைப் போன்று அதற்கு தீர்வு கண்டுவிடுவோம். உங்களது மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் தற்போது கொழும்பில் உள்ளார். எங்களது அமைச்சரும் அவரை சந்திக்கிறார். பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகாண முயற்சிக்கிறோம் என்று தெரிவித்தார்.

குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்களை தாக்கி கைது செய்வதாக இலங்கை கடற்படை மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சரின் கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தியா அடைந்துவரும் அதிவேக வளர்ச்சியைக் கண்டு இலங்கை மகிழ்ச்சியடைகிறது. இந்தியாவுடன் இந்த பிராந்தியம் முழுவதும் மேம்பட்டு வருகிறது. அண்டை நாடு என்ற அடிப்படையில் இந்தியாவின் முன்னேற்றத்தில் நாங்கள் பெருமையடைகிறோம்"" என்று தெரிவித்தார்.



## 13ஜ...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

எழுந்து,13ஐ , அமுல்படுத்தப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை எழுத்துமூலம் தருமாறு தென்னிலங்கை அடம்பிடிக்கிறது. பௌத்த பீடங்கள் உள்ளிட்ட முக்கிய அமைப்புக்களும் இந்த வலியுறுத்தலை வேண்டி நிற்கின்றன. இதனால், நிலைமைகள் விபரீதமாகியுள்ளன.

இவ்வாறுள்ள நிலையில்,தமிழர்கள் தரப்பும் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை நம்பும் நிலையில் இல்லை.ரணிலின் வழமையான காய்நகர்த்தலில் ஒன்றாகவே இதையும் அவர்கள் கருதுகின்றனர்.இந்தக் கருதுகோள் சரிப்படும் வகையில்தான், ஜனாதிபதியின் செயற்பாடும் இருந்தது. கலாசார நிலையத்தை திறப்பதற்காக தமிழர்களின் பூர்வீகப் பெரு நிலமான யாழ்ப்பாணத்துக்குச் சென்ற ஜனாதிபதி,இந்த 13 பற்றி எதுவும் பேசாது மௌனம் காத்துவிட்டார்.இந்திய அரசியல் பிரமுகர் ஒருவர் பங்கேற்ற ஒரு தேசிய நிகழ்வில்கூட ,தமிழர்களுக்கான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் மனநிலையில் ரணில் இருக்கவில்லை. தென்னிலங்கையின் அழுத்தங்களுக்கு ரணில், பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டாரா? என்ற சந்தேகத்தையும் இது,ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, உள்ளூராட்சித் தேர்தல் விடயத்திலும் ரணிலின் இரட்டைக்காய் நகர்த்தல்களால் தென்னிலங்கை குழம்பியுள்ளது.இந்நிலையில் 13 பற்றி அவர் பேசியமை அரசியல் களத்தை மேலும் குலுங்க வைத்துள்ளது.

ஆயுட்காலம் முடிவடையவுள்ள,நாட்டு மக்கள் பரவலாக எதிர்பார்த்துள்ள உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த முன்வராது,

இன்னும் இரண்டு வருடங்கள் எஞ்சியுள்ள ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை நோக்கி அவரது கவனம் திரும்பியிருப்பது சுய நல அரசியலை வெளிப்படுத்துவதாகவும் நோக்கப்படுகிறது.உள்ளூராட்சி தேர்தலிலிருந்து மக்களைத் திசை திருப்பும் நோக்குடன், பெரும்பான்மை கடும்போக்குகளை உசுப்பேற்றவா, அரசியலமைபம்பின் 13 பற்றி ஜனாதிபதி பேசினார்.? இந்த விவாதங்களே, இன்றைய பேசுபொருளாகியுள்ளன.

## கஹட்டோவிட்ட...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

இல்லையென்ற நிர்ப்பந்தத்துக்கு முகம்கொடுப்போம்.அந்த நேரத்தில் அரசியல்வாதிகளோ,அரசாங்க உயர் அதிகாரிகளோ யாரும் உதவி செய்ய வரமாட்டார்கள்.அப்படியான

ஒரு கட்டத்தில் நான் 2019 ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம் 24 ஆம் திகதி நோன்பு திறந்த பின் தராவிக்கு நான் சென்றிருந்த வேலை நான் கைது செய்யப்பட்டேன்.

இனவாதத்தின் உச்சகட்டத்தில் தண்டிக்கப்பட்ட ஒரு தனி மனிதனாக ,இந்த சமுதாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துவனாக கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் பட்ட வேதனையின் போது நான் நினைக்கிறேன் அந்த தோல்வியிலும் இந்த சமூகம் என்னோடு துணை நின்றதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.என்னை இன்று அனைத்து சமூகத்தவர்களும் பாராட்டுகின்றார்கள் ஆனால் அத்தனைக்கும் உரிமையாளர்கள் எனது சமூகம் தான்.

என்னோடு உரையாடுபவர்கள் கூறுவார்கள்

“சேர் எங்களுக்கு ஒன்றுமே செய்ய முடியாமல் இருந்தது ,ஆனால் உங்களுக்காக துவா செய்தோம். “என்பார்கள்.

நாங்கள் ஆயுதம் இல்லாமல் எங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை வெற்றி கொண்டோம்.இது ஆத்மீக ரீதியான வெற்றியாக நான் கருதுகிறேன்.இது நான் அடைந்த வெற்றி மாத்திரமல்ல ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் அடைந்த வெற்றியாகவே கருதுகிறேன் என அவர் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த நிகழ்வின் போது பட்ட மனவேதனையும் ,மனஉளைச்சலும் இன்று வரை அனைவரது உள்ளத்திலும் இருக்கும் ,ஒவ்வொரு விடியலிலும் யார் கைது செய்யப்படுவார்கள் என்ற பயங்கரமான கட்டத்திலே நாங்கள் அன்று வாழ்ந்தோம். என்னை கைது செய்திருந்த போது எனது மனைவியை சனிக்கிழமை மாத்திரம் 20 நிமிடங்கள் பார்ப்பதற்கு அனுமதிப்பார்கள். அந்த நேரத்தில் எனது மனைவி என் மீது இவர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை எழுதிக் கொண்டு வந்து சொல்வார்கள் நீங்கள் இப்படியானது எல்லாம் செய்திருக்கிறீர்கள்

என்று இவர்கள் கூறுகிறார்கள் என்று வைத்தியர் உருக்கமாக தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

உங்களுடைய பொருளாதாரம்,கல்வி மற்றும் அதிகாரங்கள் எதுவாக இருந்தாலும் அல்லாஹ்வுக்காக நீங்கள் அதனை பயன்படுத்தினால் அல்லாஹ்வுடைய உதவி கட்டாயம் கிடைக்கும் என்பது என்னுடைய வாழ்வுக்கு முன்னுதாரணமாக உள்ளது.

என்ன சவால்கள் வந்தாலும் பெரும்பான்மையானவர்களோடு அன்போடு சகோதரத்துவத்தோடு வாழ வேண்டும்.சமூகத்தில் 98 வீதமானவர்கள் நல்லவர்கள் இருக்கும்போது சமூகத்தில் 2மூமானவர்கள் குழப்பவாதிகள் இருப்பார்கள். ஆனால் அந்த இரண்டு வீதமானவர்களுக்கு சவால் விடுத்து பெரும்பான்மையில் 98 வீதமானவர்களின் அன்பை நாங்கள் இழந்துவிடுவோமாக இருந்தால் அது எதிர்கால சந்ததியினருக்கு நாங்கள் செய்கின்ற அநியாயம் என்று நான் கருதுகிறேன்.

இனவாதத்தின் உச்சத்தில் தண்டிக்கப்பட்டவன் என்றாலும் இனவாதத்துக்கு எதிராக பேசுகிறேன். பெரும்பான்மை மக்களின் உள்ளத்தை நாங்கள் வெல்ல வேண்டும் ,எங்களுடைய எதிர்காலப் பரம்பரைக்கு ஒரு முதலீடாக அமைய வேண்டும் என வைத்தியர் சிஹாப்தீன் தெரிவித்தார்.

## வானுயரும்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

மின்கட்டணத்தை இன்று முதல் 65 சதவீதத்தால் அதிகரிக்க இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழவின் மூன்று உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவேன் என இலங்கை பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

24 மணித்தியாலங்களும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க வேண்டுமாயின் வருடாந்தம் 287 பில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் 65 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான பரிந்துரையை முன்வைத்தது.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை 65 சதவீதத்தால் மீண்டும் அதிகரித்தால் நாட்டு மக்கள் மிக மோசமாக பாதிக்கப்படுவார்கள், அது சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும், ஆகவே வருடாந்தம் 142 பில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் 36 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்க பொதுபயன்பாட்டு ஆணைக்குழு தீர்மானித்திருந்தது.

36 சதவீத மின்கட்டண அதிகரிப்பு தீர்மானத்தை இலங்கை மின்சார சபை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆணைக்குழவின் உறுப்பினர்களுக்குள் முரண்பாடுகளை அரசியல் தரப்பினர் ஏற்படுத்தி, ஆணைக்குழுக்குள் இணக்கப்பாடற்ற தன்மையை தோற்றுவித்துள்ளார்கள்.

36 சதவீத மின்கட்டண அதிகரிப்பு அனுமதி தீர்மானத்தை புறக்கணித்து 65 சதவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்வைத்த பரிந்துரைக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழவின் மூன்று உறுப்பினர்கள் அரசியல் அழுத்தங்களினால் எனது அனுமதி இல்லாமல் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மின்கட்டண அதிகரிப்பை இன்று முதல் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

30,60 மற்றும் 90 மின்னலகு என்ற அடிப்படையில் மின்சாரத்தை பாவிக்கும் பாவனையாளர்களின் மின்கட்டணம் 400 சதவீதத்தினால் அதிகரிக்கப்படும்.

சுற்றுலாத்துறை சேவைக்கு ஒரு அலகிற்கு தற்போது அறவிடப்படும் 25 ரூபா 40 ரூபாவாகவும், கைத்தொழிற்சாலைகளிடமிருந்து அறவிடப்படும் ஒரு அலகுக்கான கட்டணம் 50 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும்.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை அதிகரித்தால் மக்கள் போராட்டம் மீண்டும் தோற்றம் பெறும்.

நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்பு தீர்மானத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆணைக்குழுவின் சட்டத்திற்கு முரணாக செயற்படும் தரப்பினருக்கு எதிராகவும்,மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் நீதிமன்றம் செல்வேன் என்றார்.

## அரசு துறை...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய மற்றும் மாகாண சபைப் பாடசாலைகளுக்கான பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் எந்தவொரு பதவியிலும் பணியாற்றும் 40 வயதுக்குட்பட்ட பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

உயர்கல்விக்காக தற்போது காணப்படும் பெருமளவிலான ஆசிரியர் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு ஏனைய பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## ஹஜ்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

புத்தசாசன சமய விவகார அமைச்சு, அரசாங்க ஹஜ் குழு மற்றும் வக்ஃப் சபை அங்கத்தவர்களின் பெயர்களை ஓரிரு தினங்களில் அறிவிக்க இருப்பதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க ஹஜ் குழு ஐந்து அங்கத்தவர்களை கொண்டது. ஏற்கனவே இயங்கிய ஹஜ் குழு கலைக்கப்பட்டிருப்பதன் காரணமாக புதிய அங்கத்தவர்களை நியமிக்கவுள்ளனர். அனேகமாக நாளை இந்த அறிவிப்பு மேற்கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமய விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க புதிய உறுப்பினர்கள் தொடர்பாக இன்று அறிவிக்கவுள்ளார் என முஸ்லிம் சமய கலாசார திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

வக்ப் சபை அங்கத்தவர்களும் இன்னும் ஓரிரு தினங்களில் வெளியிடப்படுமென்று அமைச்சர் தெரிவித்ததாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் தெரிவித்துள்ளார்.

கடமையை நிறைவேற்றுவதற்கு இம்முறை வழிகாட்டலுக்கு அதிகாரிகள் எவரையும் அனுப்புவதில்லை என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.இந் நிலை காரணமாக ஹஜ் யாத்திரிகர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கலாம் என தெரியவருகின்றது.

நாட்டின் நிதிநிலை காரணமாக அவ்வாறு எவருக்கும் சவூதி அரேபியாவுக்கு செல்வதற்கு நிதி தர முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.ஐந்துக்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஹஜ் கடமையில் வழிகாட்டிகளாக செல்வதுண்டு.

## தேர்தலை...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

விளைவித்த சகலரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று யானை காகம் மொட்டு கூட்டிணைந்து சதியை மேற்கொண்டு தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற (15) பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## மின்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

காரணமாக பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இலங்கை மின்சார சபைக்கு 287 பில்லியன் ரூபா மேலதிக வருமானத்தை ஈட்டும் வகையில், 66மூ மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்கான பிரேரணை ஜனவரி 02 ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட்டதுடன், கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் அதன் உறுப்பினர்கள் பலர் இராஜினாமா செய்தனர்.

வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் இரண்டு தடவைகள் நியமிக்கப்பட்டதுடன், மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க நேற்று கலந்துரையாடியிருந்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, அனைத்துத் தரப்பினரின் ஆலோசனைகளின்படி 142 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டுவதற்காக 36மூ குறைந்த மின் கட்டண உயர்வை தயாரித்து நேற்று ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு தலைவர் சமர்ப்பித்துள்ளார்.

## வாக்களிக்கும்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

இறுதி முயற்சி தேர்தலை சீர்குலைப்பதே எனவும் தபால் மூல வாக்களிப்பை ஒத்திவைத்தமை அதற்கு சிறந்த உதாரணம் எனவும் அவர் கூறினார்.





போட்டோ டிஜிடல் இன்டநேஷனல் பிறைவட் லிமிடெட் இன்று கொழும்பு 12 , கணசிங்கபரம், டயஸ்பிளேஸில் திறந்து வைக்கப்பட்டது. டொப் பிரிண்டஸ் முகாமைத்தவ பணிப்பாளர் ஸமீர் யூனுஸ் பிரதம அதிதியாகவும் , மெற்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளரம், முன்னாள் கல்மனை மாநகர சபை மேயரமான ஸிராஸ் மீராசாஹிப் கௌரவ அதிதியாகவம் கலந்து கொண்டனர்.

(அஸ்ஹர் இப்றாஹிம்)

## ஆர்ப்பட்டங்களுக்கு...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இது தொடர்பில் குறிப்பிட்ட ஜனாதிபதி, இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பாரிய பொறுப்பு பல்கலைக்கழகங்களுக்கே அதிகளவில் உள்ளன. இரண்டு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்திலேயே இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தில் நிர்வாகம் மற்றும் பொதுக் கொள்கைக்கான மையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதில் ஒன்று உப வேந்தரை நீக்கக் கோரி ரு/ஹணு பல்கலைக்கழகத்திலும் மற்றையது எமது கூட்டுத்தாபனம் ஒன்றின் பொது முகாமையாளரை நீக்கக் கோரியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, பொது முகாமையாளரை பதவி நீக்குவதென்பது அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டதொரு விடயம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். “ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்தமைக்காக நாம் அவரை பதவியிலிருந்து நீக்க மாட்டோம். அவருக்கு எதிராக ஏதேனும் தீவிரமான குறைபாடுகள் இருப்பதாக அவர்கள் நினைத்தால் அதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறை ஒன்று உள்ளது. உப வேந்தர்கள் தொடர்பிலும் பின்பற்ற வேண்டிய நடைமுறையொன்று உள்ளது. மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காகவும் அது கூட்டுதாபனம் அல்லது பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்பட்டது என்பதற்காகவும் இந்த அரசாங்கம் மாறாது. நாம் விதிமுறைகளைப் பின்பற்றி அதன்படியே செயற்படுவோம். ஏனெனில், நான் தற்போது இவற்றை கருத்திற்கொண்டால், அடுத்த தடவை அவர்களுக்கு பீடாதிபதிகள் மற்றும் அதனை தொடர்ந்து திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோரையும் பதவி நீக்கும் தேவை ஏற்படும். பின்னர் தங்களைக் கேட்காமல் எம்மால் பேராசிரியர் ஒருவரை நியமிக்க முடியாது என்றும் அவர்கள் எம்மிடம் கூறமுடியும்.” என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

“இந்தப் பல்கலைக்கழகங்களில் என்ன நடக்கப் போகிறது என்பது குறித்து நாம் தீவிரமாக பார்க்க வேண்டும் என நான் நினைக்கிறேன். என்ன நடக்கிறது என்பதை அறியும் உரிமை நாட்டுக்கு உண்டு. எமது மக்களுக்கு கல்வி புகட்டுவதற்காக நாம் பணத்தைச் செலுத்துகிறோம். எனவே பல்கலைக்கழகங்கள் முறையாக செயற்பட வேண்டுமென நாம் விரும்புகிறோம். இந்த ஆர்ப்பாட்டம் ருஹூணு பல்கலைக்கழகத்தில் இடம்பெறுவது எனக்கு கவலையளிக்கிறது.” என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## மின்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் தலைமையில் சபா மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதன் பிரகாரம் பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் வகையில் இடம்பெற்ற அமர்வில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் பெயர் மாத்திரமே தவிசாளர் பதவிக்காக முன்மொழியப்பட்டது. இதனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் அவர்களினால் ஏகமனதாக சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் பெயரை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆறு உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட பத்து உறுப்பினர்கள் இன்றைய சபைக்கு சமூகமளித்தனர்.









# அரங்கம்

### தேர்தல் நடக்குமா?

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்ற சர்ச்சை தொடர்கின்ற நிலையில், அரசியல் அரங்கு குழம்பிப் போயிருக்கின்றது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி கேர்னல் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் தேர்தலை ஒத்திப்போடுமாறு தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

### பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்பதற்குள் பிளவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று ஐந்து மாதங்களுக்குள் இரண்டாவது முறையாகவும் ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்ற கூட்டத் தொடர் கடந்த புதனன்று திறந்து வைக்கப்பட்டது. இரண்டாவது முறையும் பாராளுமன்ற கூட்டத் தொடரை குறுகிய காலத்திற்குள் ஒத்தி வைப்பதற்கான காரணம் என்ன என்பது குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன. இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக ஏதாவது முடிவொன்றை தெரிவிப்பதற்கு ஜனாதிபதி பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்தி வைத்தாரா என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றும் உரையை செவிமடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியோ, ஜாதிக ஜனபல வேகயவோ வருகை தந்திருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் கொள்கை உரையை நிகழ்த்துவது ஒரு வேடிக்கையானது.

இலங்கை மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர். மனோகணேசன், பி.திகாம்பரம், ரிஷாட் பதியுதீன், ராதாகிருஷ்ணன், பைசல் காசிம், எம்.எம்.தௌபீக் உட்பட்ட உறுப்பினர்கள் சபையில் தங்கியிருந்தனர். தமிழர் கூட்டமைப்பின் சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். அமைச்சர்களான ஹரின்பெர்னாண்டோ, மனுஷ்ய நாணயக்கார ஆகியோர் உரையை கேட்பதற்கு வருகை தந்திருக்கவில்லை. அவர்கள் இருவரும் அச்சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு வியஜமொன்றை மேற்கொண்டிருந்தனர். ஜனாதிபதி உரையையடுத்து பாராளுமன்ற உணவகத்தில் சிற்றுண்டி விருந்துபசாரமொன்று நடைபெற்றது.

அப்போது பலரும் ஜனாதிபதியை விளித்து ஜனரஞ்சமற்ற தீர்மானங்களை எவ்வாறு எடுக்கின்றீர்கள் என்று கேட்டார்கள். நான் எப்போதும் உண்மையை பேசுபவன் என்று ஜனாதிபதி பதிலளித்தார். அப்போது ஜனாதிபதியின் அருகே வந்த மனோ கணேசன் ஜனாதிபதியை வாழ்த்திவிட்டு எந்த சவால் வந்தாலும் நீங்கள் ஒரே கொள்கையில் இருக்கிறீர்கள் எனத் தெரிவித்தார்.

அப்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெருந்தோட்ட வாழ் மக்களின் பிரச்சினைகளை மனோகணேசன் என்னிடம் தெரிவித்தார். எனது பேச்சின் மூலம் மனோ அவரது இலக்கினை அடைந்து கொண்டார் என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

### ரணில் - சரத் மோதல்

பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிப்பதற்கு முதல் நாள் அரசாங்க பாராளுமன்ற குழுவின் கூட்டம் நடைப்பெற்றது. இங்கு பேசிய பல உறுப்பினர்களும் எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையை பகிஷ்கரிப்பது பற்றி கருத்து தெரிவித்தனர். பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எம்.எம்.எப்.நிதி பற்றி விமர்சித்து பேசினார். இதை செவிமடுத்த ஜனாதிபதிக்கு கடும் கோபம் வந்தது. இவை பற்றி பேசி எதிர்க்கட்சிக்கு தலைப்பு அமைத்துக் கொடுக்க வேண்டாமென்று சரத் வீரசேகரவுக்கு ஜனாதிபதி தெரிவித்தார். அதன் பின் சரத் வீரசேகர மௌனம் காத்தார்.

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலான் ஜனதிலக தேர்தல் நடக்குமா என்று கேட்டார். அதற்கு உங்களிடம் பணம் இருக்கின்றதா என்று கேட்டார். பணம் இருக்கின்றதா இல்லையா என்பது தெரியாது. தேர்தலை நடத்த பணம் இல்லை என்று ஜனாதிபதி கூறினார். ஜனாதிபதி கூறிய விதத்தை பார்த்து எம்.பிக்களது சிரிப்பை அடக்க முடியவில்லை. உறுப்பினர் அவர்களே தேர்தலை நடத்துவது குறித்து எனக்கு தீர்மானம் எடுக்க முடியாது. அது பற்றி முடிவெடுக்க வேண்டியது உயர்நீதிமன்றம். ஆனால் தேர்தலை நடத்துவதற்கு திறைசேரியில் பணம் இல்லை என்று மீண்டும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிதாக போடப்பட்டுள்ள வரி தொடர்பாகவும் இங்கு பேசப்பட்டது. அரசாங்க ஊழியர்களின் கொடுப்பனவுகளில் வரி அறவிடுவது தொடர்பாக கடந்த சில தினங்களாக பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது குறித்து. பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்தன விளக்கமளித்தார். இந்தப் பிரச்சினையை நாங்கள் தீர்த்து விட்டோம். இப்போது அவ்வாறான பிரச்சினை இல்லை. ஊருக்குப் போகலாம் என்று ஜனாதிபதி வேடிக்கையாகக் கூறினார்.

ஊர்களுக்குப் போவதற்கு அல்ல பாராளுமன்றத்துக்கு வருவதற்கும் பணம் இல்லையென்று பாராளுமன்ற உறுப்பினர்கள் லொபியில் பேசிக் கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சம்பளத்தில் 83 ஆயிரம் வரியாக அறவிடப்பட்டுள்ளது. அமைச்சர் ஒருவரின் சம்பளத்தில் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வரையில் வரியாக வெட்டப்பட்டுள்ளது. இதனால் தூரப் பிரதேசங்களில் இருந்து வருகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பாராளுமன்ற லொபியில் உறுப்பினர்கள் பேசிக் கொண்டனர்.

..................

ஈரான் தேசிய தினத்தை ஆக்கிரமித்த அரச தரப்பினர்

ஈரான் இஸ்லாமிய குடியரசின் தேசிய தினம் கொழும்பு 07 பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள ஈரான் தூதுவராலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. ஈரான் தூதுவரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டிருந்தனர். இதில் முக்கியமாக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உட்பட அரசாங்க தரப்பினர் கூடுதலானோர் இதில் கலந்து கொண்டிருந்தனர். ஏழு மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் கோத்தாபய ராஜபக்ஷவின் வருகை தாமதித்தமையால் அவர் வருகை தந்த பின்னரே நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

எதிர்க்கட்சித் தரப்பில் எவரும் இதில் கலந்து கொண்டிருக்கவில்லை. சுற்றாடல் அமைச்சர் ஹஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார். ஈரான் - இலங்கை உறவை நினைவு படுத்தி உரையாற்றிய அவர், பொருளாதார ரீதியில் ஈரான் வழங்கிய உதவிகளை நன்றியுடன் நினைவு கூறினார்.

# பௌசி - ரணில் பக்கம் சாய்வாரா?

நாடு பாரிய நெருக்கடியிலிருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். என்னுடைய கருத்தும் அதுதான். நாங்கள் பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு கூடி பகிஷ்கரிப்பதாக தீர்மானமெடுத்தனர். அதன்படி ஐக்கிய மக்கள் சக்தி தாம் எடுத்த தீர்மானத்தை அரசிலிருந்து வெளியேறி தனியாக இயங்கும் சுதந்திர மக்கள் கூட்டணிக்கும் அறிவித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பேராசிரியர் ஜி.எல். பீரிஸிற்கு தமது பகிஷ்கரிப்பு தொடர்பில் அறிவித்தார். இந்த அறிவிப்பையடுத்து பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உதய கம்மன்பிலவுக்கு தெரிவித்ததையடுத்து சுதந்திர மக்கள் கூட்டணியின் நிர்வாகக்கூழு கடந்த செவ்வாய்க்கிழமை கூடி தீர்மானத்தை எடுத்தது. நிர்வாகக் குழு கூட்டத்தில் பேசிய வாசுதேச நாணயக்கார எம்.பி, கொள்கை உரையை மட்டும் பகிஷ்கரிப்பதால் எதுவும் விளங்காது. நாங்கள் விளங்கக் கூடிய வகையில் எதாவது செய்தாகவேண்டும் என்றார். பாராளுமன்றத்துக்கு வந்த புதிய உறுப்பினர் ஒருவர் கொள்கை உரையை பகிஷ்கரிக்கலாமா என்று கேட்டார்.

பிரேமதாச காலத்தில் நாம் கொள்கை உரையை பகிஷ்கரித்திருக்கிறோம் என்று வாசுதேவ நாணயக்கார கடந்த காலத்தில் நிகழந்ததை ஞாபகப்படுத்தினார். அப்படியானால் நாங்கள் சத்தம் போட்டுவிட்டு வெளியேறுவோம் என்று விமல் வீரவன்ச தெரிவித்தார். ராஜாசண மேணியாவ என அனைவரும் சத்தம் போட்டுவிட்டு வெளியேறுவோம் எனக் கூறினர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுதந்திர மக்கள் முன்னணியினர் எல்லோரும் கூட்டாக ராஜாசண மேனியோ என்று குரலெழுப்பிவிட்டு ஓடினர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுவில் இணைந்துள்ள மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் இந்த பகிஷ்கரிப்பில் பங்குபற்றவில்லை.

### பௌசி - ரணில் பக்கம் சாய்வாரா?

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த முஜிபுர் ரஹ்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தெரிவான முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி கடந்த 09 ஆம் திகதி சபாநாயகர் முன்னிலையில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பௌசி சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் போது அவரது கட்சியை சார்ந்தவர்கள் எவரும் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியினர் பாராளுமன்றத்தில் இடம்பெறும் ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையை பகிர்ஷ்கரித்ததனால் ஆகும். சத்தியப் பிரமாணம் செய்த பௌசிக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

வெள்ளியன்று பௌசி பாராளுமன்றத்தில் உரையாற்றினார். பௌசியின் உரை இப்போது சர்ச்சையை கிளப்பியுள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அவர் தெரிவித்த கருத்துக்கள் இப்போது சர்ச்சையை உருவாக்கியுள்ளது. பௌசி சத்தியப்பிரமாணம் செய்த தினத்தன்று அவரது இல்லத்தில் மாலை அவரது நண்பர்கள், ஆதரவாளர்கள் அவரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் முன்னாள் பிரதியமைச்சர்களான உசைன் பைலா, அமீரலி உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பை பழைய ஆதரவாளர்கள் நண்பர்கள் ஒன்று கூடிய சந்திப்பு என அரசியல் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பௌசியிடம் கேட்டபோது "தனக்கும் - கட்சிக்கும் பிரச்சினைகள் உள்ளது. ஆனால், கட்சி மாறமாட்டேன் என்றார்.

### அரகலயவினர் பாராளுமன்றில்

பாராளுமனறாத்துக்கு கடந்த வியாழன்று அரகலய போராட்டக் குழுவின் சிலர் வருகை தந்திருந்தனர். பெதும் கேர்னல் உட்பட அரகலய போராட்டத்தில் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களும், அங்கத்தர்களும் சுமார் ஐம்பது பேரை பாரராளுமன்றத்துக்கு அழைத்து வந்தது பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவாகும்.

பாராளுமன்றத்தில் இயங்கும் தேசிய சபை கூட்டத்துக்கே இவர்கள் வருகை தந்திருந்தனர். அரச நிர்வாகம் தொடர்பாகவும், மக்கள் பிரச்சினைகள் தொடர்பாகவும் இவர்கள் பல பிரேரணைகளை முன்வைத்தனர். அரகலய காரர்களின் கருத்துக்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைதியாக செவிமடுத்தனர். இங்கே பெதும் கேர்ணல் பேசும் பொழுது, எனக்கு அழைப்பு இரண்டு நாட்களுக்கு முன்னரே கிடைத்தது. அதனால் தயாராகி வரமுடியிவ்லை எனத் தெரிவித்தார். கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அவர் பேசினார்.

NEWS PLUS

WWW.NEWSPLUS.LK

2023 FEBRUARY 15 - WEDNESDAY

Email: editor@newsplus.lk

FB: newsplustamil

# துருக்கி மற்றும் சிரியா மக்களுக்கு உதவுவோம், பிரார்த்திப்போம்!

துருக்கி மற்றும் சிரியா நாடுகளில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சி காரணமாக இதுவரை 27000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை மேலும் பெருமளவில் அதிகரிக்கலாம் என்று மீட்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது தவிர 27000க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்திருப்பதாகவும் துருக்கி அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் இருந்து கிடைக்கும் செய்திகள் புகைப்படங்கள் வீடியோ காட்சிகள் மனதை ஒழுக்குவதாக உள்ளது. அதேபோன்று கிடைக்கப்பெறும் ஒவ்வொரு நாள் செய்திகளும் பல விதமான அதிர்ச்சிகளை தரக்கூடியதாக இருக்கிறது.

இன்று துருக்கிய மக்கள் குறிப்பாக துருக்கியின் சிரியா பிரதேச மக்கள் இந்த பாதிப்பு காரணமாக பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக அங்கே நிகழும் காலநிலை பெரும் பாதிப்பாக இருக்கிறது. மீட்பு பணிகளை கூட துரிதமாக முன்னெடுக்க முடியாமல் கடும் குளிர் காலநிலை நிலவுகிறது.

உலக மக்களின் அவதானம் துருக்கியின் பக்கம் திரும்பிய வண்ணம் உள்ளது. துருக்கியை நோக்கி உலக மக்கள் உதவிகளை அனுப்பிய வண்ணம் இருக்கிறார்கள். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுப்பதற்காக துருக்கிய அரசாங்கமும் ஜனாதிபதி ரஜப் தையப் அர்துகானும் பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றனர். இதுவரை இதற்காக 5.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார். பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஜனாதிபதி சென்று மக்களுக்கு ஆறுதல் கூறி மீட்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வருகின்றார். இங்கே முக்கியமாக அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கது. " இது இறைவனின் ஏற்பாடு, அவன் நாடியதை நிறைவேற்றுவான். நாம் இழந்த உயிர்களை ஒருபோதும் மீட்டெடுக்க முடியாது. எனினும் வீடுகளை இழந்தவர்கள் சஞ்சலப்படாதீர்கள். உங்கள் வீடுகளை நிர்மாணிக்க ஒரு தீரா கூட நீங்கள் செலவழிக்க வேண்டியதில்லை. நீங்கள் இழந்ததை விட நாங்கள் சிறந்த வீடுகளை கட்டித் தருவோம். ஒரு மரத்தை கூட இழந்து இருந்தால் ஒன்றுக்கு பத்து மரங்களை நாங்கள் தருவோம் என்று அவர் கூறியிருந்தார். உண்மையிலேயே அவர் யதார்த்தத்தை துருக்கிய மக்களுக்கு விளக்கியுள்ளார். இறந்தவர்களை உண்மைகள் மீட்டு தர முடியாது அது அல்லாஹ்வின் ஏற்பாடு. ஆனால் ஏனைய சொத்து இழப்புகளை துருக்கிய அரசு செய்யும் என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறார். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட துருக்கிய மற்றும் சிரியா மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல நாடுகள் உதவி வழங்கி வருகிறது. நாமும் என்னால் ஆன உதவிகளை இம்மக்களுக்கு வழங்க வேண்டும். கடந்த வெள்ளிக்கிழமை ஜ/ம்மா தொழுகையின் போது துருக்கி நாட்டு மக்களுக்காக வேண்டி நாட்டின் சகல பள்ளிகளிலும் துஆ பிரார்த்தனைகள் நடைபெற்றன. இலங்கை அரசாங்கம் கூட தேயிலை அன்பளிப்பு செய்து ஒருமைப்பாட்டை காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க துருக்கி நாட்டின் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இலங்கையின் அனுதாபங்களை தெரிவித்துள்ளார். அத்தோடு, எங்களால் முடிந்த உதவிகளை துருக்கி நாட்டு மக்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் இலங்கையில் இன்று இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியில் அவர்களுக்கு பணத்தை அனுப்புவது கூட பெரும் சிக்கலாக இருக்கிறது. எந்த வகையில் துருக்கிக்கு பொருட்களை அனுப்பலாம் என சிந்தித்து அவர்களது துன்பங்களில் நாங்களும் பங்கு கொள்ள வேண்டும். சுனாமிய அர்த்தத்தின் போது துருக்கி பெரும் அளவில் உதவி செய்ததை நன்றியுடன் நாம் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூற வேண்டும். பல பிரதேசங்களில் வீடமைப்பு திட்டங்களை நிர்மானித்ததோடு பெருமளவான நிவாரண பொருட்களையும் துருக்கி அச்சந்தபதில் அன்பளிப்பு செய்திருந்தது. இலங்கையின் நேச நாடான துருக்கியிலே அவளத்தை தாண்டி துருக்கி மீண்டும் அதன் பழைய நிலைமைக்கு திரும்ப நாம் அனைவரும் பிரார்த்திக்க வேண்டும். இந்த அனர்த்தத்தினால் கொல்லப்பட்ட மற்றும் இதுவரையில் மீட்கப்பட முடியாமல் இருக்கின்ற மக்களை அவசரமாக மீட்டெடுக்க இறைவனின் அருள் அந்நாட்டுக்கு கிடைக்க வேண்டும் என நாங்கபிரார்த்திக்கிறோம் அத்தோட இந்த அனர்த்தத்தினால் கொல்லப்பட்ட மக்களுக்கு ஜன்னத்துல் பிர்தவ்ஸ் சுவர்க்கம் கிடைக்க இறைவனை பிரார்த்திக்க வேண்டும். துருக்கி மட்டுமின்றி சிரியாவிலும் பெருமளவானோர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். சிரியா மக்கள் ஏற்கனவே யுத்ததால் பாதிக்கப்பட்டு பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றது சிரியா மக்களுக்கும் தமது நிவாரணங்களை அனுப்ப முடியுமா என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிரியா மக்களின் துயர் போக்க உதவுவோம், பிரார்த்திப்போம்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# மனநலமும் ஆலோசனையும்

# கிராமியம்

எங்கள் வாழ்விடத்தின் மகிழ்ச்சி எங்களுக்கு முக்கியமானது என்று நாங்கள் அனைவரும் உறுதியாக நம்புகிறோம். நகர்ப்புற மக்களும் நகரை அண்டிவாழும் மக்களும் கிராமத்து மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் அவர்களின் எளிமையான, சுகமான வாழ்வியல் முறை பற்றி உற்சாகமாக கருத்துத் தெரிவிப்பதை இன்றெல்லாம் அதிகம் பார்க்கிறோம்.

நகரத்தில் வசிக்கும் ஐந்தில் நான்கு பேர் கிராம வாழ்க்கை வழங்கும் சுகங்களில் மிகவும் திருப்தி அடைகிறார்கள் என்ற செய்தியை நாம் கேள்விப்பட்டிருக்கலாம். கிராமிய வாழ்க்கை உடல் நலத்திலும் உள நலத்திலும் பாரியளவு தாக்கம் செலுத்துவது இதற்கான காரணமாக இருக்கலாம்.

அமைதியும் அழகும்
இயற்கையும் இனிமையும்
நிரம்பிய இடம் கிராமம்.

நகர வாழ்க்கையின் பரபரப்புகள், சலசலப்புகள், எரிச்சல்கள், உளைச்சல்கள் எதுவும் இல்லாத உள்ளத்துக்கும் உடலுக்கும் ஆறுதலையும் ஓய்வையும் அள்ளித் தரும் இடம் கிராமம்.

கிராமம் என்கின்றபோதே அதற்கே உரித்தான சில அடையாளங்கள் கண்முன்னே வந்து அமர்ந்து கொள்கின்றன.

மனதுக்குள்ளே சிறகடிக்கின்றன.

மரம் செடி கொடிகள், வயல்வெளிகள், நீரோடைகள், கிணறுகள், குளம், ஒற்றையடி பாதைகள், திண்ணை வீடுகள், முற்றம், ஆலயங்கள், விவசாயம், கால்நடைகள், மீன் பிடித்தல், வேட்டையாடுதல் இப்படி பல விடயங்கள் கிராமிய நினைவுகளாக வருகின்றன.

சுவையான சுத்தமான நிலத்தடி நீர், பாரம்பரிய உணவுகள், காய்கறிகள், பழங்கள், அதிகாலை சேவலின் கூவல் எல்லாமே கிராமத்தின் தனித்துவமான தன்மைகள்.

பரந்த சூழலும்,
இரைச்சல் இல்லாத அமைதியும்,
இயற்கையோடு இணைந்த உறவும்,
பசுமையும் எளிமையும் கொண்ட வாழ்வும்,
மன இறுக்கம் அற்ற ஆரோக்கியமான வாழ்க்கை முறையும்
கிராமத்துக்கே உரித்தான உயரிய குணங்கள்.

கிராமத்து மக்கள்
வஞ்சகமில்லா மனம் படைத்தவர்கள்.
உபசரிப்பதில் ஊறிப்போனவர்கள்.
கொடுப்பதில் குதூகலம் காண்பவர்கள்.
விருந்தோம்பலில் கபடம் காட்டாதவர்கள்.

உம்மம்மா வாப்பம்மா
பெரியம்மா பெரியப்பா
சாச்சா சாச்சி
மாமா மாமி
தாத்தா நானா இப்படி உறவு முறைகளை வாய் நிறைய வெளிப்படுத்தி உறவை உயிராய் பேணுவதில் இன்பம் காண்பவர்கள்

கிராமத்தோடு சேர்ந்து வரும் மரபுகளும் பிரிக்கவே முடியாத இணைப்புகளும் அவ்வளவு அழகாகவும் கேட்பதற்கு ரம்யமாகவும் கிராமத்தோடு ஒட்டி வாழவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்.

கிராமப் புறம்,
கிராமிய வாழ்க்கை,
கிராமியத்துவம்,
கிராமியத்தனம்,
கிராமிய மனம்,
கிராமியப் பாடல்,
கிராமிய மருத்துவம்,
கிராமிய கலாச்சாரம்,
கிராமிய பண்பாடு,
கிராமிய சாப்பாடு,

கிராமவாசிகள் இப்படி கிராமத்தோடு ஒட்டிய கிராமிய வாழ்வியலை அலங்காரம் செய்யும் எத்தனையோ சேர்மானங்களும் எத்தனையோ கலவைகளும் நிறைந்து இருக்கும்.

இயற்கையோடு இயைந்த பல வாழ்வியல் முறைகளை இப்பவும் கிராமங்களில் காணலாம்.

அதில் விறகடுப்பில் சமைக்கும் மண்பானை சமையல்கள் மனித மனங்களில் மகத்தான இடம் பிடித்தவை.

பாரம்பரியத்தின் சின்னமாக,
வரலாற்றின் ஊற்றாக இருந்ததும்
இருந்து வருவதும் கிராமமும் கிராமிய வாழ்வியலும் தான்.

# ராஜபக்ஸக்களினால் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் தலையில் கட்டி வேடிக்கை பார்க்கும் அரசாங்கம்

## - இம்ரான் எம்.பி

ராஜபக்ஸக்கள் செய்த ஊழலினால் ஏற்பட்ட பாதிப்புகளை மக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ராஜபக்ஸக்கள் ஆட்சி பீடமேறியது முதல் நாட்டில் கமிசன் செயற்பாடுகள் அதிகரித்தன. ஊழல் உச்சக்கட்டத்தில் இருந்தது. பொருத்தமற்ற பொருளாதார நடைமுறைகளை அவர்கள் பின்பற்றினர். இதனால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது.



பொருட்களின் விலை 300 முதல் 500 வீதம் வரை அதிகரித்தன. இன்றும் அதிகரித்து வருகின்றன. எனினும் வருமானத்தில் எந்த அதிகரிப்பும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் பொதுமக்கள் சொல்ல முடியாத அளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டின் இந்த நிலைக்கு காரணமானவர்கள் மிகவும் சந்தோசமாக தைரியமாக நடமாடி வருகின்றார்கள். அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால் அவர்களால் உருவாக்கப்பட்ட சகல நட்டங்களையும் இழப்புகளையும் பொதுமக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது.

ராஜபக்ஸக்கள் காலத்தில் இடம்பெற்ற பல மோசடிகளும் அதனால் ஏற்பட்ட பாரிய நிதி இழப்புகளும் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சகலரும் இவற்றை விளங்கியிருக்கின்றனர்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கவில்லை. பொதுமக்கள் எப்படி கஸ்டங்களை அனுபவித்தாலும் ராஜபக்ஸக்களைப் பாதுகாப்பதே தனது கடமை என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்.

இந்த விடயங்களை பொதுமக்களுக்கு மீள நினைவுபடுத்த விரும்புகின்றேன். நாட்டை பிச்சைக்கார நாடாக்கிய மொட்டுக்கட்சியினருக்கும் அவர்களுக்கு துணை போனவர்களுக்கும் நமது பொன்னான வாக்குகளை அளிக்கலாமா என்பதை அனைவரும் சிந்தித்து பார்க்க வேண்டும்.

அதேபோல இவ்வளவு அநியாயங்கள் செய்தவர்களைப் பாதுகாத்து தமது சுகபோகத்தை மட்டும் கவனத்தில் கொண்டு செயற்பட்டுவரும் யானைக் கட்சியினருக்கும், அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் வாக்களிக்கலாமா எனக் கேட்க விரும்புகின்றேன்.

இறைவனால் நமக்கு சிந்திக்கும் ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் சிந்திப்போம். ஊழல்வாதிகளுக்கும், அவர்களுக்கு துணை போனவர்களுக்கும் இந்தத் தேர்தல் மூலம் நல்ல பாடம் படிப்பிப்போம் - இவ்வாறு அவர் கூறினார்.








கொழும்பு நகர முஸ்லிம் வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்தனர். தற்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், வர்த்தக சமூகம் தொடர்பான கொள்கை மற்றும் பணி ஒழுங்கு குறித்தும் இங்கு விளக்கப்பட்டது.



கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் இணை அமைப்பான கொள்ளுப்பிட்டிய மஸ்ஜித் சம்மேளனம் சகல இன மாணவர்களுக்கும் பண வுச்சர்களைப் பகிர்ந்தளிதது.பவுத்தாலோக மாவத்தையிலுள்ள பவுத்த சாசன மத்திய நிலையத்தில் நடைபெற்றது. வெளிநாடுகளில் வாழும் முஸ்லிம்கள் இதற்கான நிதி அனுசரணை வழங்கியிருந்தனர்.அமைப்பின் சமய விவாகர இணைப்பாளர் ரிசான் ஹூசைன் மாணவர் ஒருவருக்கு வவுச்சரினை வழங்குவதனைப் படத்தில் காணலாம்.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடயோர் 075 40 10 238 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

NEWS PLUS







AMYS நிறுவனத்தினால் திருமணம் முடிக்கவிருக்கும் பெண்களுக்காக நடாத்தப்பட்ட " மகிழ்ச்சிகரமான குடும்பம் " எனும் பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பு, கொத்தொட்டுவ NAAS கலாசார நிலையத்தில் அண்மையில் (01) நடைபெற்ற பொழுது எடுக்கப் பட்ட படங்கள். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிரேஷ்ட சட்டத்தரணியும் கொழும்பு மாவட்ட பள்ளிவாயல் சம்மேளனத்தின் தலைவருமான திரு சிராஸ் நூர்தீன் மற்றும் விசேட அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலாமாவின் பொதுச் செயலாளர் அஷ் ஷெய்க் அர்கம் நூ ராமித் அவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்tpy AMYS நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M.S.M. தாஸீம் பிரதிப் பணிப்பாளர் A.J.M. வாரித் , NAAS கலாசார நிலைய அஷ்ஷெய்க் நாலிம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஒரு கிலோ நெல்லுக்கு 100 ரூபா உத்தரவாத விலை வழங்க ஜனாதிபதி அறிவுறுத்தல்



ஒரு கிலோ நெல்லை அரசாங்கத்தின் ஊடாக நூறு ரூபா வீதம் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு உணவு வழங்கக்கூடிய மாகாணமாக வட மாகாணமும் யாழ்ப்பாண மாவட்டமும் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பரந்தன் வயல்வெளியில் நடைபெற்ற வடக்கு நெல் அறுவடை செய்யும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

பரந்தன் வயல்வெளிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அங்குள்ள விவசாயிகளிடம் நெற்செய்கை தொடர்பான பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன், அப்பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மேலும் கூறியதாவது,

விவசாயிகளுக்கு தேவையான உரங்களை அரசாங்கம் துரிதமாக வழங்கியது. எனவே, இம்முறை பெரும் போகத்தில் மேலதிக நெல் அறுவடை கிடைக்கும் என நம்புகிறோம். அதற்கமைய ஒரு கிலோ நெல்லை 100 ரூபா உத்தரவாத விலைக்கு அரசாங்கத்தின் ஊடாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று பலர் பொருளாதார நெருக்கடியில் தவித்து வருகின்றனர். விளைச்சல் அதிகரித்தாலும் அரிசி வாங்குவதற்கு பொருளாதார பலம் இல்லாத பிரிவினர் உள்ளனர். எனவே, மார்ச், ஏப்ரல் மாதங்களில் இருபது இலட்சம் குடும்பங்களுக்கு 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம். சிங்கள-தமிழ் புத்தாண்டு காலப்பகுதியாகும் போது அவர்களுக்கு 20 கிலோ அரிசி கிடைத்திருக்கும்.

தற்போது ஒரு ஹெக்டெயாருக்கு சுமார் 03 மெட்ரிக் தொன் நெல் அறுவட கிடைக்கிறது. நாம் செயல்படுத்தி வரும் விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின் மூலம் ஒரு ஹெக்டெயாருக்கு குறைந்தது ஆறு மெட்ரிக் தொன் அறுவடை பெற வேண்டும். முடியுமானால் அதனை 7 மெட்ரிக் தொன்களாக உயர்த்த எதிர்பார்க்கிறோம். அந்த முன்னேற்றத்தை அடைய தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நெல் கொள்முதல் செய்து சேமித்து வைக்கும் முறைகள் பின்னர் உருவாக்கப்படும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளை நிறுவ எதிர்பார்க்கிறோம். அடுத்த இரண்டு வருடங்களில் அந்த செயற்பாடுகளை நிறைவு செய்ய முடியும். இப்பகுதிக்கு தேவையான நீர் வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.பூனகரி ஏரியை மீளப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இரணைமடு ஏரி தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தையும் வடமாகாணத்தையும் மீண்டும் நாட்டிற்கு உணவளிக்கும் அளவுக்கு அறுவடை செய்யக்கூடிய மாகாணமாக மாற்றுவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். இதற்கு மேலதிகமாக கால்நடை தீவன உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறோம் என்றும் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன மற்றும் வடமாகாண அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் கிளிநொச்சி பன்னம்கட்டி கிராம வயல்வெளிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அங்குள்ள விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்ததோடு அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பெருந்தொகையான பிரதேச மக்கள் ஜனாதிபதியைக் காணச் சுற்றிலும் கூடியிருந்ததோடு அவர்களின் தகவல்களைக் கேட்டறியவும் ஜனாதிபதி மறக்கவில்லை. அங்கிருந்த சிறுபிள்ளைகள் மத்தியில் சென்று அவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார்.





இலங்கையிற்கு விஜயம் செய்த பாகிஸ்தானின் முப்படைப் பிரதானி சஹீர் சம்சாத் மிர்சாவுக்கு விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. படைப் பிரதானி சவேந்திர சில்வா அவரை வரவேற்பதனையும் படத்தில் காணலாம்.



இலங்கையின் இந்திய உயர் ஸ்தானீகர் மிலிந்த மொரகொட புதுடில்லியிலுள்ள மொரோக்கோவின் தூதுவர்முஹம்மத் மலீகியைச் சிந்தித்து உரையாடிய பின் அல்குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பு பிரதி ஒன்றைக் கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.

# "Bless the souls who sacrificed - Amazon College"

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மற்றுமொரு சமூகசேவை






கொழும்பு 05 அமைந்துள்ள சிறுவர்தொண்டு நிறுவனத்திற்கு கற்றலுக்கான உபகரணங்கள் பம்பலப்பிட்டி அமேசன் உயர்கல்வி நிறுவனப்பணிப்பாளர் திரு. இல்ஹாம் மரிக்காரின் ஆலோசனையின் கீழ் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அமேசன் உயர்கல்வி முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களுக்கான சிறப்புரை ஒன்றும் திருமதி இல்ஹானா மரிக்காரினால் வழங்கப்பட்டது – மாணவர்கள் அனைவரினதும் பிராத்தனையை பெற்றுக்கொண்டது மன நெகிழ்ச்சியை அளித்தது.






# தலைகீழாகத் தொங்கும் விஞ்ஞானத்தின் செருக்கு



சுஜப்,எம்,காசிம்

அண்ணாந்து பார்க்கும் அடுக்கு மாடிகள் அடியோடு வீழ்ந்து, பெரும் அவலத்தை ஏற்படுத்தியுள்ளது துருக்கி,சிரிய பூகம்பம். ஐரோப்பாவையே அதிர வைத்துள்ளது இந்த இயற்கைப் பேரிடி.மனிதனின் உச்சக்கட்ட அறிவியல் வளர்ச்சிக்கு இயற்கை விட்டிருக்கும் சவால் இது. நிலத்துக்கு அடியில் ஆழப்பதிக்கப்பட்ட "கொங்கிரீட்" அத்திவாரங்களைத் தகர்த்து,வானுயர்ந்த கட்டடங்களை தரைமட்டமாக்கியுள்ள இந்தப் பூகம்பம்,சிலருக்கு ஆத்மீக ஞாபகங்களையும் உயிரூட்டியுள்ளது. மனிதனின் இயல்பே,இப்படித்தான். உச்ச அளவில் முயற்சித்து முடியாவிட்டால், ஆண்டவனின் தலையில் திணித்து விடுவது.

நித்திரையிலிருந்தவர்கள் இப்படி நிர்க்கதியாகுவர் என,யார் நினைத்தது. எல்லாவற்றையும் எதிர்வு கூறும் விஞ்ஞானம், இதையும் எதிர்வுகூறி



எச்சரித்திருக்கலாம்.

இதனால்தான், இன்றைய நவீன உலகு விஞ்ஞானமா?

மெய்ஞ்ஞானமா?என்ற ஊசலாட்டத்தில் உள்ளது.இந்த அனர்த்தத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் உண்மைத் தொகையை எந்தக் கணினியும் கணிக்க இயலாது.தேடும் பணிகள்,மீட்புப்பணிகளாலும் இந்த உண்மையைக் கொண்டுவர இயலாது. இந்நிலையே நாளாந்தம் நகர்கிறது.

சடலங்களைத் தேடுவதா?குற்றுயிராகக் கிடப்போரை கரையேற்றுவதா? அல்லது அங்கங்களையிழந்து அவதிப்படுவோருக்கு சிகிச்சையளிப்பதா?இந்த அவலங்களே அங்கு நீடிக்கின்றன.

ஐந்து மாதங்களுக்கு அவசரகால நிலையைப் பிரகடனம் செய்துள்ள துருக்கி அரசாங்கம்,சர்வதேசத்திடம் கையேந்துகிறது.சிரியாவிலும் இதுதான் நிலை. உள்நாட்டுப் போருக்கு 2011 இலிருந்து முகங்கொடுக்கும் இம்மக்கள், இயற்கையின் நியதியாலும் நிர்க்கதியாகி உள்ளனர். மருத்துவம்,உணவு,இருப்பிடம்,வாழ்வாதாரம் உள்ளிட்ட உதவிகள் ஒரே நேரத்தில் தேவைப்படுகிறது. விநியோகப்பாதைகள் இடிபாடுகளால் மூடிக்கிடக்கின்றன. வான் மார்க்கங்களால் வருமளவுக்கு காலநிலையும் கை, தருவதாக இல்லை.இதனால், அவசரமாக உதவிகள் வந்தும், அடைந்த ஆதாயம் எதுவும் இல்லை.அவல நிலைமைகள் மேலும் மோசமாவதற்கு விநியோக வழிகள் தடைப்பட்டிருப்பது பிரதானமாகியுள்ளது.

ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்படுகிறது துருக்கி. ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் பெறாதுள்ள ஒரே ஐரோப்பிய நாடு என்பதால்தான்,துருக்கிக்கு இந்தப் பெயர்.ஆயினும்,சர்வதேச அளவில் சிறந்த ராஜதந்திர உறவுகளைப் பேணுகிறது. இதனால்,நாலா புறங்களிலும் உதவி,ஒத்தாசைகள் துருக்கிக்கு வருகின்றன.

கட்டட இடிபாடுகளால் எழும்பும் புழுதிகள்,திடீரெனப் பற்றிக் கொள்ளும் தீ,பாரிய தீப்பிழம்புகளிலிருந்து வெளியாகும் புகை என்பவற்றால்,மீட்புப் பணியாளர்கள் உணர்விழந்து மயங்குவதையும்,திடீரெனக் காயப்படுவதையும் கள நிலவரங்கள் காட்டுகின்றன.

இந்த அவலத்தின் கொடூரங்கள் மனங்களிலிருந்து மறையும் வரைக்கும் மானிட வர்க்கத்துக்கு தூக்கம் ஏது?அவ்வாறு தூங்குவதானால்,விஞ்ஞானத்தின் உத்தரவு வேண்டும்,இல்லாவிடின் மெய்ஞ்ஞானத்தின் பாதுகாப்பு அவசியம்.இன்றைய நிலவரங்களால் மக்களின் மனங்களை இந்தப் பீதிகளே பீடிக்கின்றன.ஊழிக்காலம் குறித்து ஆகமங்கள்,வேதங்களில் எச்சரிக்கப்பட்ட காட்சிகளையா சிரியாவிலும்,துருக்கியிலும் காண்கிறோம்.இவ்வாறான அழிவுகள்தான், மதங்களின் இருப்பைப் பாதுகாக்கிறதோ?இவ்வாறு எண்ணுமளவில்

மானிடத்தின் பதறல்கள்,மனித உணர்வுகளைப் பதப்படுத்துகின்றன. விஞ்ஞானத்தின் செருக்குத்தனத்தை தலைகீழாகத் தொங்கவிடுவதும் இவ்வாறான இயற்கைத் தாண்டவங்களே!












நீர் கொழும்பு கட்டானயில் அமைந்துள்ள ஓமான் நாட்டின் முன்னணி நிறுவனமான அல் உபைதானில் இலங்கையின் 75 சுதந்திர தினத்தை முன்னிட்டு பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பணிப்பாளர் சபை உறுப்பினர் யாஸிர் லஹீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய தென்னை பயிர்ச்செய்கை சபை முகாமையாளர் வேறகொட தேசிய கொடியை ஏற்றிவைப்பதையும் இலங்கை விமானப்படையின் ஓய்வு பெற்ற வின் கமாண்டோ எம்.எச்.எம்.ஷிபா தென்னம் கன்றினை கையளிப்பதை படத்தில் காணலாம்.



# துருக்கியை உலுக்கிய நில நடுக்கம்!



அப்ரா அன்சார்



வழமை போன்று பல எதிர்பார்ப்புக்களுடன் கூடிய நாளாக கடந்த திங்கட்கிழமை (06) துருக்கியில் அமைந்தன. திங்கட்கிழமை அந்த அதிகாலையில் அவர்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்புக்களும் நொருங்கிப்போய்விட்டன. அதிகாலை 4.17 மணியளவில் காசியன்டெப் நகரில் 7.8 ரிக்டர் அளவில் 17.9 கி.மீ ஆழத்தில் இந்த பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டதை அமெரிக்கா புவியியல் ஆய்வு அமைப்பான யு.எஸ் ஜியோலஜிகல் சர்வே தெரிவித்தது. துருக்கியில் இதுவரை ஏற்பட்ட நிலநடுக்கங்களில் மிக மோசமான நிலநடுக்கம் இதுவாகுமென நிலநடுக்க ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

நிலநடுக்க அதிர்வு சுமார் இரண்டு நிமிடங்களுக்கு நீடித்ததாக உயிர்தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர். துருக்கியின் காரன்மராஸ் மாகாணத்திலுள்ள எல்பிஸ்டான் மாவட்டத்தில் திங்கட்கிழமை 7.5 ரிக்டர் அளவில் மற்றுமொரு நிலநடுக்கம் பதிவாகின. துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் பேரழிவை உணர்த்தும் புதிய செயற்கைக்கோள் படங்கள் வெளியாகியுள்ளன. துருக்கியின் தெற்கு நகரங்களான இஸ்லாஹியே, நுர்தாகி, டுஸிசி உள்ளிட்ட நகரங்களின் சேதங்களை காட்டுகின்றன. தங்கள் உணவகத்தில் தங்கியிருந்த 14 பேரில் ஏழு பேர் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளதாக, உணவக உரிமையாளர் ஒருவர் சர்வதேச ஊடகத்திடம் தெரிவித்தார்.

மீட்புப் பணிகளுக்காக சிறப்பு குழுக்கள், மோப்ப நாய்கள், உபகரணங்களை வழங்கி உலக நாடுகள் ஆதரவுக்கரம் நீட்டி வருகின்றன. ஆனால், துருக்கியில் உள்ள மூன்று விமான நிலையங்களும் குறிப்பிடத்தக்க அளவு பாதிக்கப்பட்டுள்ளதால், இத்தகைய உதவிகள் வந்து சேர்வதில் சவால்கள் ஏற்பட்டுள்ளன.

வடக்கு சிரியாப் பகுதியில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான சிரியா அகதிகள் முகாம்களில் தங்கியிருந்தனர்.

இந்தப் பகுதியின் கட்டுப்பாடு சிரியா அரசாங்கம், குர்திஷ் படையினர், மற்ற புரட்சிக் குழுக்கள் என மூன்று தரப்பிடமும் உள்ளது. நிலநடுக்கத்திற்கு முன்பிருந்தே, உறைய வைக்கும் குளிர், காலரா தொற்று நோய், மோசமான உள்கட்டமைப்பு ஆகியவற்றால் சிரியா அகதிகள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட அச்சத்தால் தங்களால் எங்கும் செல்ல முடியவில்லை என, அலெப்போ நகரைச் சேர்ந்த குடியிருப்புவாசிகள் ராய்ட்டர்ஸ் செய்தியில் தெரிவித்தனர்.

ஜண்டைரிஸ் பகுதியைச் சேர்ந்த ஒருவர், தன் குடும்பத்தினர் 12 பேர் இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்ததாக, ஏ.எஃப்.பி செய்தியில் தெரிவித்தார். தன்னுடைய குடும்பத்தினர் இடிபாடுகளுக்கிடையே சிக்கியிருப்பதாக, மற்றொரு நபர் தெரிவித்தார்.

"அவர்களின் குரல் கேட்கிறது. அவர்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள். ஆனால், காப்பாற்ற யாரும் இல்லை" என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு சிரியாவின் இட்லிப்பில் அமைந்துள்ள அல்-ஷிஃபா மருத்துவமனையில் கடந்த ஏழு ஆண்டுகளாகப் பணியாற்றியவர் பிரிட்டனை சேர்ந்த ஷஜுல் இஸ்லாம். பிபிசி ரேடியோ 4-இன் "தி வேர்ல்ட் டுநைட்" நிகழ்ச்சியில் பேசிய அவர், தங்கள் மருத்துவமனை மிக மோசமான மரணங்களை இந்த நிலநடுக்கத்தால் சந்தித்துள்ளதாகத் தெரிவித்தார்.

"எங்கள் மருத்துவமனை நிரம்பியுள்ளது. சுமார் 300-400 பேர் தற்போது எங்கள் மருத்துவமனையில் உள்ளனர். ஒரு படுக்கைக்கு இரண்டு முதல் மூன்று பேர் உள்ளனர்," எனத் தெரிவித்தார்.

மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ள 40-45 பேரை, தான் ஐசியூவுக்கு அழைத்துச் சென்றதாக அவர் தெரிவித்தார். "மற்றவர்களிடமிருந்து வென்டிலேட்டரை அகற்றி, உயிர் பிழைக்க அதிக வாய்ப்புள்ளவர்களுக்குப் பொருத்துகிறோம். மருத்துவமனையின் நுழைவு வாயிலில் இருந்துகொண்டு யாரைக் காப்பாற்ற முடியும் என்பது குறித்து முடிவு செய்கிறோம்," எனத் தெரிவித்தார்.

உலகத்தில் நிலநடுக்கம் அதிகமாக ஏற்படும் நாடுகளுள் ஒன்றாக துருக்கி அமைந்துள்ளது.

அந்நாட்டின் வட-மேற்குப் பகுதியில் 1999ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 17,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அதேபோன்று, கிழக்கு மாகாணமான எர்ஸின்கன் பகுதியில் 1939ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 33,000 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போது ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் சைப்ரஸ், லெபனான் மற்றும் இஸ்ரேல் வரை உணரும் வகையில் மிக மோசமாக அமைந்துள்ளது.

துருக்கியில் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்கள் 100 மணி நேரம் கழித்து காப்பாற்றப்பட்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை 21,000 ஆக உயர்ந்துள்ள நிலையில், இடிபாடுகளில் இருந்து மேலும் உயிர் பிழைத்தவர்களை மீட்கும் நம்பிக்கையில் மீட்புப் பணியாளர்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

100 மணி நேரத்திற்கும் மேலாக, இடிபாடுகளில் இருந்து மேலும் உயிர் பிழைத்தவர்களை மீட்கும் நம்பிக்கையில், மீட்புப் பணியாளர்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

கஹ்ராமன்மாராஸில், 7.8 மற்றும் 7.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கங்களுக்குப் பிறகு, குடியிருப்பு கட்டிடங்கள், அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் சந்தைகள் உட்பட நகர மையத்தின் முக்கிய பகுதிகள் இடிபாடுகளாக மாறியதால், தேடல் மற்றும் மீட்புக் குழுக்கள் குப்பைகள் நிறைந்த மலைகளில் தடுமாறி வருகின்றன.

பல இலட்சக்கணக்கான உள்ளூர் அமைப்புகளும், தன்னார்வலர்களின் நிலையான ஓட்டமும் தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவுகின்றன. பணியின் மகத்தான தன்மையைக் கருத்தில் கொண்டு, உயிர் பிழைத்தவர்களைக் கண்டுபிடிக்க சர்வதேச குழுக்கள் வந்துள்ளன.

வெள்ளிக்கிழமையன்று இறப்பு எண்ணிக்கை 21,500 ஐ எட்டியதால் - உறைபனி வெப்பநிலை மற்றும் அழிவின் மலைகளுக்கு மத்தியில் - இன்னும் பலர் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை குறைந்து வருகிறது.

நிலநடுக்கத்தின் மையப்பகுதிக்கு அருகிலுள்ள துருக்கிய நகரமான கஹ்ராமன்மாராஸில் இருந்து அல் ஜசீராவின் ரெசுல் செர்தார் பேசுகையில், "இந்த இடிந்து விழுந்த கட்டிடம் ஒரு கல்லறையாக உள்ளது" என்று கூறினார். நூற்றுக்கணக்கான அதிர்வுகளுக்கு மத்தியில் சில மணிநேரங்களுக்குப் பிறகு இரண்டாவது 7.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. "டசின் கணக்கான மக்கள் இடிபாடுகளில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளனர், ஆனால் அனைவரும் இறந்துவிட்டனர்" என்று செர்டார் கூறினார்.

இன்னும், அழிவுகளுக்கு மத்தியில் சில நம்பிக்கைகளுக்கு இடமிருக்கிறது. தெற்கு துருக்கியில் உள்ள ஹடேயின் அன்டாக்யா மாவட்டத்தில் இடிந்து விழுந்த கட்டிடத்தின் இடிபாடுகளுக்கு அடியில் இருந்து 18 மாத குழந்தையும் அவரது குடும்ப உறுப்பினர்களும் 96 மணி நேரம் சிக்கி உயிருடன் மீட்கப்பட்டதாக அனடோலு ஏஜென்சி தெரிவித்துள்ளது.

துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் "நூற்றாண்டின் பேரழிவு" என்று கூறிய துருக்கி-சிரியா நிலநடுக்கங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 21,500 ஐ கடந்துள்ளது. (வாசிக்கும் போது எண்ணிக்கையில் மாற்றம் வரலாம்)

துணை ஜனாதிபதி ஃபுவாட் ஒக்டேயின் கூற்றுப்படி, சிரியாவில் குறைந்தது 3,377 பேர் இறந்ததாக அறியப்படுகிறது என்றார். ஒப்பிடுகையில், 2011 இல் ஜப்பானின் ஃபுகுஷிமாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 18,400 பேர் இறந்தனர், இது சுனாமியைத் தூண்டியது மற்றும் 1999 இல் துருக்கியின் இஸ்மித் தாக்கிய நிலநடுக்கத்தில் 18,000 பேர் இறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர் மற்றும் பல பல்லாயிரக்கணக்கானோர் வீடற்றவர்களாக உள்ளனர்.

## மீட்புப் பணிகள்!

குளிர்கால வானிலை மற்றும் சாலைகள் மற்றும் விமான நிலையங்கள் சேதம் ஆகியவை மீட்புப் பணியைத் தடுக்கும் வகையில் அமைந்துள்ளன. துருக்கியில் சிலர் அரசாங்கம் பதிலளிப்பதில் மெதுவாக இருப்பதாக புகார் கூறியுள்ளனர் - மே மாதம் எர்டோகன் மீண்டும் தேர்தலை எதிர்கொள்ளும் நேரத்தில் அவரை காயப்படுத்தக்கூடிய ஒரு கருத்தாக இது அமைந்துள்ளது. ஜனாதிபதி கடந்த நாட்களாக பாதிக்கப்பட்ட நகரங்களுக்கு விஜயம் செய்து வருகிறார்.

டிராக்டர்கள், கிரேன்கள், புல்டோசர்கள் மற்றும் அகழ்வாராய்ச்சிகள் உட்பட 5,500 க்கும் மேற்பட்ட வாகனங்களின் உதவியுடன் 110,000 க்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் இந்த முயற்சியில் பங்கேற்பார்கள் என்று துருக்கியின் பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது .

சிக்கியவர்கள் ஒரு வாரம் அல்லது அதற்கு மேல் உயிர்வாழ முடியும் என்று நிபுணர்கள் கூறினாலும், உறைபனி வெப்பநிலையில் உயிர் பிழைத்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகள் குறைந்து வருகின்றன, அவசரகால குழுக்கள் இப்போது ஆபத்தான நிலையற்ற கட்டமைப்புகளை இடிப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

கஹ்ராமன்மாராஸில், கூடைப்பந்து மைதானத்தின் அளவுள்ள ஒரு விளையாட்டு அரங்கம், உடல்களை தங்க வைப்பதற்கும் அடையாளம் காண்பதற்கும் ஒரு தற்காலிக பிணவறையாக செயல்பட்டு வந்தது.

துருக்கிய நகரமான யுவெயமலய இல், குழந்தைகள் கோட்டுகள் மற்றும் பிற பொருட்களை விநியோகிக்கும் ஒரு டிரக்கின் முன் பல இலட்சக்கணக்கானவர்கள் உதவிக்காக துடிக்கின்றனர். உயிர் பிழைத்த ஒருவரான அஹ்மத் டோக்கோஸ், இப்பகுதியிலிருந்து மக்களை வெளியேற்றுமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தார். வீடுகளை இழந்தவர்களில் பலர் கூடாரங்கள், மைதானங்கள் மற்றும் பிற தற்காலிக தங்குமிடங்களில் தங்கியுள்ளனர், ஆனால் மற்றவர்கள் வெளியில் தூங்கியுள்ளனர்.

## சர்வதேச உதவிகள்!

சர்வதேச உதவிக்காக வேண்டுகோள் விடுத்த நிலையில், 95 நாடுகள் உதவி செய்ய முன்வந்துள்ளதாக, துருக்கி ஜனாதிபதி ரிசெப் தையிப் எர்டோகன் தெரிவித்தார்.

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குத்தேரஸ் சர்வதேச உதவிக்காக அழைப்பு விடுத்தார். பேரழிவால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் "ஏற்கெனவே உதவியை அணுகுவதில் சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், அப்பகுதிகளில் மனிதாபிமான உதவி தேவை," என்று அவர் தெரிவித்தார்.

துருக்கிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை அனுப்பியுள்ளது. மேலும், நெதர்லாந்து மற்றும் ரொமானியாவை சேர்ந்த மீட்புக்குழுவினர் துருக்கிக்கு செல்கின்றனர்.

76 பேர் அடங்கிய சிறப்புக்குழு, உபகரணங்கள், மீட்பு நாய்கள் உள்ளிட்டவற்றை அனுப்புவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ், ஜெர்மனி, இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் உதவி செய்வதாக அறிவித்துள்ளனர். ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புதின், துருக்கி மற்றும் சிரியா ஆகிய இரு நாடுகளுக்கும் உதவுவதாக அறிவித்துள்ளார். அவ்வாறே ஈரானும் தெரிவித்துள்ளது.

# அதலபாதாளத்தில் கிடந்த பொருளாதாரம் ஜனாதிபதியின் முயற்சியால் தலைநிமிர்கிறது


## ஓரவஞ்சனை அரசியலை எதிர்க்கட்சி கைவிட வேண்டும். அமைச்சர் நஸீர் அஹமட்

ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க நாட்டைப் பாரமெடுத்து ஒன்பது மாதங்களாகின்ற நிலையில், எதையும் செய்யவில்லை என்ற எதிர்க் கட்சியினரின் விமர்சனங்களை நிராகரித்த சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், ஓரளவாவது பொருளாதாரம் சீராகச் செல்கின்ற நிலைமையை ரணில் விக்ரமசிங்கவே ஏற்படுத்தியதாகத் தெரிவித்தார். ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.இங்கு பேசிய அமைச்சர் தெரிவித்ததாவது,

பொருளாதாரம் அதலபாதாளத்தில் கிடந்த நிலையில், நாட்டைப் பாரமெடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். பாரிய புரட்சி வெடிக்குமோ என்ற அச்சத்தில் அவர், இந்த அழைப்பை ஏற்கவில்லை.எனினும்,துணிச்சலாக இந்நாட்டைப் பாரமெடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. திறைசேரியில் பணமில்லாதிருந்தது. எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார நெருக்கடிகளால் நாடு இருளில் மூழ்கிக்கிடந்தது. எம்பிக்கள், பாராளுமன்றத்துக்கு வருவதற்கு அச்சமடைந்த சூழலில்தான் ரணில் விக்ரமசிங்க நமது நாட்டைப் பாரமெடுத்தார். இப்போது நிலைமைகள் படிப்படியாக வளர்ந்து வருகின்றன.

அமெரிக்கா, சவூதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் உதவி வழங்க முன்வந்துள்ளன.பரிஸ் கிளபிலுள்ள நாடுகள் கூட எமது நாட்டுக்கு உதவத் தயாராகின்றன. சர்வதேச நாணய நிதியம் கடன் அடிப்படையில் உதவுவதற்கான சகல ஏற்பாடுகளையும் நிறைவு செய்திருக்கிறது. நாட்டுக்கு விஜயம் செய்த பான்கீமூன் மற்றும் பெற்றீசியாஸ்கொட்லண்ட் ஆகியோரும் எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவ உள்ளனர்.இந்த முன்னேற்றங்களின் யதார்த்தத்தை எவரும் மறந்து பேச முடியாது.

இன்றைய நிலையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றிப் பேசப்படுகிறது.13 ஆவது திருத்தம் தமிழர்களை மட்டும் திருப்திப்படுத்துவதற்கு



அமுல்படுத்தக்கூடாது. முஸ்லிம்களும் இதில் திருப்தியடைய வேண்டும்.

இத்திருத்தம் வந்த பின்னர்தான்,மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகள் பறிபோகின.

இம்மாவட்டத்தில் 27 வீதமாகவுள்ள முஸ்லிம்களுக்கு நான்கு பிரதேச சபைகளே உள்ளன.அதுவும் இவை,1,7 வீதக் காணிகளுக்குள் சுருக்கப்பட்டுள்ளன.இவற்றுக்கும் தீர்வு வேணும்.

தேர்தலை நடத்துவதற்கான சூழலில் நாடு இல்லை. எல்லோருமாக ஒன்றிணைந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்வருவது அவசியம்.பொருளாதாரம் பலமடைந்த பின்னர் ஏனையவை பற்றிப் பேசலாம் என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

# இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பான உங்கள் அவதானம் அதிகரிக்க வேண்டும்

## பாஜக அமைச்சர் முருகன், அண்ணாமலை ஆகியோரிடம் மனோ தெரிவிப்பு!



இந்தியாவை எந்த கட்சி ஆள்கிறது என்பது இந்திய உள்விவகாரம். அதில் நாம் தலையிடோம். இப்போது ஆள்கின்ற கட்சி உங்கள் பாரதீய ஜனதா கட்சி. மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை, மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் எல். முருகன் மற்றும் பாரதீய ஜனதா கட்சியின் தமிழக கிளை தலைவர் கே. அண்ணாமலை ஆகிய நீங்கள் இருவரும் உங்கள் கட்சியின் இரண்டு பிரதான ஆளுமைகள்.

உங்கள் கட்சி, அரசாங்கம் சார்பில் நீங்கள் இருவரும், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் அதிக அவதானம் காட்டவேண்டும். தொப்புள் கொடி உறவுகளான எம்மீது, இந்தியாவின் குறிப்பாக இந்திய மத்திய அரசாட்சி கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் அக்கறை இன்னமும் கணிசமாக அதிகரிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் எதிர்பார்க்கிறோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்த அமைச்சர் முருகன் மற்றும் அண்ணாமலை ஆகியோருக்கும், இலங்கை அரசியல் சமூக தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பை இந்திய தூதரகம் நேற்று ஏற்பாடு செய்திருந்தது. அமைச்சர் முருகன், பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை, இந்திய தூதுவர் கோபால் பாகலே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், எம்பி ரிசாத் பதுர்தீன், இதொகா தலைவர் செந்தில் தொண்டமான், கோபியோ இலங்கை கிளை தலைவர் குமர் நடேசன், வர்த்தகர் கோபால்சாமி ஆகியோரும் கலந்துகொண்ட இச்சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

தென் தமிழக மாவட்டங்களான திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் இருந்து சரியாக 1823 ஆண்டு முதல் இலங்கைக்கு ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்டு, இன்றைய 2023ல் 200 ஆண்டுகளை இலங்கையில் நிறைவு செய்யும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் உங்கள் அரசும், நாடும் மிக அதிக அக்கறையை கொள்ள வேண்டும் என நான் கோருகிறேன்.

1964ம் ஆண்டின் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் எம்மை இந்நாட்டில் பலவீனப்படுத்தி விட்டது. இந்த ஒப்பந்தம் நடைபெற்று, நமது மக்கள் நாடு கடத்தப்பட்டு இருக்காவிட்டால், இன்று இலங்கை நாடாளுன்றத்தில் சுமார் 25 மலையக தமிழ் எம்பிக்கள் இருந்திருப்போம். வடகிழக்கு தமிழ் எம்பிகளுடன் சேர்த்து சுமார் 50 தமிழ் எம்பிக்கள் அரசியல் பலத்துடன் இலங்கையில் இருந்திருக்க வேண்டிய நிலைமையை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாமல் செய்து விட்டது.

அந்த சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் எஞ்சியவர்களுக்கு இலங்கை முழு குடியுரிமை வழங்க வேண்டும். இன்று சட்டப்படி குடியுரிமை இருக்கிறது. ஆனால், காணி, கல்வி, வீட்டு, சுகாதார உரிமைகள் இந்நாட்டின் ஏனைய குடிமக்களுக்கு சமானமாக எமது மக்களுக்கு இல்லை. ஆகவே, முழு குடியுரிமை இல்லை.

# 9 ஏ சித்தியடைந்த சாதாரண தர மாணவர்கள் கௌரவிப்பு!









க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9A சித்தி பெற்ற முஸ்லிம் மாணவ மாணவியர்களுக்கான கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை (12) கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்க்கிள் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு கொழும்பு முஸ்லிம் கல்வி முன்னேற்ற சங்கம் மற்றும் கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்க்கிள் ஆகியன இணைந்து நடாத்தின.

கம்பஹா, கொழும்பு , களுத்துறை போன்ற மேல் மாகாண மாவட்டங்களில் இருந்து சுமார் 125 மாணவ மாணவியர்கள் இதற்காக விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களுக்கான அழைப்பிதழ் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் 95% வீதமான மாணவ மாணவியர்கள் கலந்து பயன் பெற்றார்கள்.

கொழும்பு ஸாஹிரா கல்லூரி மாணவர்களின் பேண்ட் வாத்தியங்களுடன் அதிதிகள் வரவேற்கப்பட்டு தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

கிராத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வில் வரவேற்புரை , அதிதிகள் உரை , பாடசாலை மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் , 9யு சித்தி பெற்ற மாணவ மாணவியர்க்கான கௌரவிப்பு , பரிசில் வழங்கல் , நன்றியுரை என பல வண்ண நிகழ்வுகள் அரங்கேறின..

கொழும்பு முஸ்லிம் கல்வி முன்னேற்ற சங்கம் 11 ஆவது தடவையாக நடாத்திய இந்நிகழ்வு பற்றியும் அது கடந்து வந்த பாதை, ஆரம்ப வரலாறு பற்றியும் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளருமான எம்.இஸட். அஹமட் முனவ்வர் விளக்கமாக முன்வைத்தார்..

பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக் கழக வேந்தர் பாயிஸ் முஸ்தபா, கௌரவ அதிதியாக Dr.ஷாபி ஷிஹாப்தீன், சிறப்பு அதிதிகளாக அகில இலங்கை ஜம்மியதுல் உலமா பொதுச் செயலாளர் அல் ஹாபிழ் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் , பிஷ்ருல் முபீல் ( Trans Asia cellular Pvt Ltd Colombo ) , ரிஸ்வி மரிக்கார் ( principal of zahira college - Colombo ) , M.Y.M. முகர்ரம் ( managing director - Trans Asia ), பேராசிரியர் M.J.M. ரிஸ்வி ( university of colombo ), அஷ்ஷெய்க் அல்ஹாஜ் S.L நௌபர் கபூரி ( Chairman Nidha ul Hyr ), பாலசுப்ரமணியம் ( Director - Sarita Jewellery Pvt Ltd ), அல்ஹாஜ் முஸ்லிம் ஸலா/ஹத்தீன் ( Chairman - Mushan International Pvt Ltd ) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

9 A சித்தி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் , புத்திஜீவிகள் , உலமாக்கள் , தனவந்தர்கள் , நலன்விரும்பிகள் , ஊர் மக்கள் , நிர்வாகத்தினர் போன்றோரும் கலந்து கொண்டு நிகழ்வை நிறைவாக்கினர்.

(பயாஸா பாஸில்)